*1*

# அழுகின்ற விதவை

## (1:1-11)

*(ஆங்கில மொழியில் இந்தப் பாடத்தில் எருசலேம் நகரம் ஒரு விதவை பெண்ணின் உருவகத்தில் 'அவள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் நகரத்தை 'அவள்' என்று குறிப்பிடும் வழக்கம் இல்லையென்றாலும், பாடப்பொருள் நயம் கருதி, எருசலேம் நகரம் 'அவள்' என்றே குறிக்கப்படுகிறது - மொ.ர்.)*

*புலம்பல் 1:1-11ல் விவரிக்கப்பட்டுள்ளதுபோல், அதாவது அழுகின்ற விதவை போல் எருசலேம் இருந்த காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள். எதிரிநாடு ஒன்று இரண்டு நீண்ட ஆண்டுகளாக நகரத்தைச் சுற்றி முகாமிட்டிருந்தது. எவரொருவரும் உள்ளே வருவதற்கோ அல்லது வெளியே செல்லுவதற்கோ அனுமதிக்கப்படவில்லை. அங்கிருந்த எல்லா உணவும் உண்ணப்பட்டுவிட்டது. அவளது மக்கள் பசியாயிருந்தனர்; அவள் பசியாயிருந்தாள். அங்கு குளிப்பதற்குப் போதுமான தண்ணீர் இருக்கவில்லை; குடிப்பதற்கு அவளுக்குச் சிறிதளவே தண்ணீர் இருந்தது. அவள் தன் வயிற்றில் கடும் வலியுடன் படுக்கைக்குச் சென்றாள். உறங்கச் செல்ல முயற்சிப்பதில் அவள் தனது படுக்கையில் ஒவ்வொரு இரவிலும் உருண்டு புரண்டு படுத்தாள்.*

*இளைப்பாறுதலற்ற இந்த இரவுகள் ஒன்றில் வழக்கத்திற்கு மாறுன சத்தம் ஒன்று அவளது கவனத்தை ஈர்க்கிறது. ஒரு கூட்டமானது தொலைவில் சத்தமிடுவதாக காணப்பட்டது. அந்தக் கூக்குரல் அதிகரிக்கவே, அவள் தனது படுக்கையில் (இருந்து எழுந்து அதில்) அமரு கின்றாள். ஒலிகள் நிச்சயமாகவே மக்களாலேயே ஏற்படுத்தப்பட்டன, ஆனால் அவர்கள் களிகூர்ந்திருக்கவில்லை. அவர்களின் கதறுதலானது, துக்கித்து அழுதல் போலவும் அலறுதல் போலவும் இருந்தது.*

*அவள், என்ன நடந்து கொண்டிருந்தது என்பதைத் தீர்மானிப் பதற்காகத் தனது காதுகளை வலிந்து பயன்படுத்தினாள். திடீரென்று ஒரு மனிதன் கட்டளையிட்டுக் கூவுவதை அவள் கேட்டாள். தெருக்களில் காலணிகளினால் மிதிபடும் ஓசையானது இன்னும் உரத்துக் கேட்டது, மற்றும் தட்டும் சத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது. விரைவிலேயே அவளுடைய வீட்டில் கும்பல் கூடிற்று, அவளது சொந்தக் கதவே தட்டப் பட்டது.*

*இந்த வேளையில், அவளது பிள்ளைகள் விழித்தெழுந்து பயத்தில் விம்மி அழுதனர். அவள் நடுநடுங்கியவளாக கதவருகே சென்றாள். அவள் ஒருகணம் நிற்கையில், (கதவின்) மறுபுறத்தில் இருந்து படாரென்று தட்டும்*

இன்னொரு சத்தம் கேட்டது. கதவின் தாழ்ப்பாளைத் திறக்கக் கஷ்டப்படும் அளவுக்கு அவளது கைகள் நடுங்கின. கடைசியில் அவள் கதவைத் திறந்தபோது, இரத்தம் சொட்டிக்கொண்டிருந்த பட்டயம் ஒன்றைப் பிடித்திருந்த போர்வீரன் ஒருவனை அவள் கண்டாள். அவன் அவளது தோள்களைப் பற்றிப் பிடித்து, அவளை தெருவில் இழுத்துப் போட்டான். பின்பு அவன், மற்றவர்களைத் தேடுவதற்காக அவளது வீட்டிற்குள் நுழைந்தான்.

இந்த விதவையின் பெருந்துன்பத்தை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அவளது கணவன், பாபிலோனுக்கு எதிராகக் கலகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, விரோதிகளின் கைகளில் மரித்திருந் தான். அவளுக்கு இருந்ததெல்லாம் அவளது பிள்ளைகள் மாத்திரமே. அவர்களில் மூத்தவள் அப்போதுதான் அழகிய இளம்பெண்ணாக மலரத் தொடங்கியிருந்தாள். அவளது மற்ற பிள்ளைகள் இன்னும் இளையவர் களாய் இருந்தனர். ஒரு குழந்தை இன்னமும் தாயிடத்தில் பால்குடித்துக் கொண்டிருந்தது; அவள் தனது பிள்ளைகளுக்கு என்னவாயிற்று என்று பார்ப்பதற்காக வீட்டிற்குள் திரும்பிச் செல்லமுயன்றாள். அவள் இல்லா திருந்தால், அவளது குழந்தை தனித்திருக்குமே! இருப்பினும். அவள் அசையக் கூடாதிருந்தது; அவள் ஏற்கனவே தெருவில் இருந்த நூற்றுக் கணக்கான மற்ற கைதிகளுடன் விலங்கிடப்பட்டிருந்தாள். சிறைப்பிடிக்கப் பட்டிருந்தவர்களில் சிலர் அரைகுறையான உடையணிந்து இருந்தனர், ஏறக்குறைய எல்லாருமே வெறுங்கால்களுடன் இருந்தனர்.

மக்கள், தூசி நிறைந்திருந்த தெருவில் விலங்குகளைப் போன்று நடத்தப்பட்டிருந்தனர். கூட்டத்துடன் நடந்து செல்லாதவர்களுக்கு சாட்டையால் அடி கொடுக்கப்பட்டது அல்லது ஒரு போர்வீரனின் பட்டயநுனியினால் குத்தப்பட்டனர். அந்த விதவை ஒரு உரத்த கூக்குரலை/அழுகையைக் கேட்டாள் மற்றும் அது தனது சொந்தத் தொண்டையில் இருந்து வந்ததை அவள் திடீரென்று உணர்ந்தாள். அவளது ஆத்துமாவின் ஆழத்தில் எங்கிருந்தோ வந்த அழுகையினால் கூட அவளது பெருந்துன்பம் விவரிக்கப்படவோ வெளிப்படுத்தப்படவோ முடியாததாக இருந்தது.

தெருவில் இருந்த கூர்மையான கற்கள், அவளது வெறுங்கால்களில் இரத்தம் வடியும் வரைக் குத்திக் கிழித்தன. அவள் தெருவில் கூட்டத்தாருடன் நகர்ந்து சென்று, நகரவாயிலுக்கு வெளியே சென்று, வடக்கு நோக்கிச் செல்லும் சாலையில் நடக்கலானாள். எத்தனையோ மணிநேரங்கள்போல காணப்பட்ட காலம் வரை அவள் நடந்தாள். அவளது வலப்புறத்தில், சூரியன் பெரிய நெருப்புப் பந்துபோல் தொடுவானத் திலிருந்து எழுந்து வருவதை அவளால் காணமுடிந்தது. அவளுக்குப் பின்னால் இன்னொரு ஒளி/சுடர் இருந்தது. அவளது நகரம் - அவளது வீடு- தீக்கிரையாக்கப்பட்டிருந்தது! அவளது இளம் குழந்தை! அவளது பிள்ளைகள்! அவர்கள் எங்கே இருந்தனர்? தீ வைக்கப்படுவதற்கு முன் அவர்கள் வெளியேறியிருந்தனரா? அவர்கள் கூட்டத்தில் எங்காவது இருந்தனரா? அவள் திரும்பிச்சென்று அவர்களைச் தேட விரும்பினாள்,

*ஆனால் பின்னோக்கிச் செல்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை. இனியும் தான் சுயாதீனமாய்/விடுதலையாய் இருப்பதில்லை என்று அவள் அறிந்தபோது, அவளது இருதயம் (துக்கத்தில்) அமிழ்ந்து போயிற்று; அவள், பாபிலோன் என்ற காட்டுமிராண்டித்தனமான புறஜாதியான தேசத்திற்கு அடிமையாகி யிருந்தாள்.*

*வெளிச்சம் அதிகரித்தபோது, அவள் தனக்குப் பழக்கப்பட்ட முகங்களைத் தேடத் தொடங்கினாள். அவள் தான் கண்ட யாரையும் அடையாளம் காணாததை உணருகையில் பெருந்திகில் அவளைத் தாக்கியது. சித்திரவதை செய்யப்பட்டவர்களின் பீறிட்ட அழுகையொலி ஏறக்குறைய காதடைக்கச் செய்யும் கூக்குரலை எழுப்பின. பலநாட்களாக அவள் இளைப்பாறுதலையோ அல்லது அவளது பிள்ளைகளைப்பற்றி ஆறுதல் தரும் செய்தியையோ எதிர்பார்க்கக் கூடாதிருந்தாள். ஒரு நீண்ட, கடினமான பயணம் முன்னதாக இருந்தது. அவளது புதிய இல்லமானது மலைகள் மீது, ஆறுகளின் குறுக்கே மற்றும் பாலவன நிலத்தினூடே எண்ணூறு மைல்கள் பயணத்திற்குப் பின்பு சென்று சேரவேண்டியதாக இருந்தது. அவள் அந்த பயணத்தில் உயிர்பிழைத்திருக்கக் கூடிய திராணி கொண்டிருந்தால், அவ்விடத்திற்கு வெறுங் கால்களால் நடந்தே சென்று சேருவாள்.*

*சிறைப்பிடிக்கப்பட்ட விதவை எருசலேமுக்கு உருவகமாக எரேமியாவினால் பயன்படுத்தப்பட்டாள். ஒருகாலத்தில் தேவனுடைய நகரம் என்று அறியப்பட்டிருந்த அந்த நகருக்கு ஏற்பட்டிருந்த பரிதாப நிலையை வேறு எவ்வகையில் சிறப்பாகச் சித்தரிக்க இயலும்? தேவனுடைய மக்கள், அவர்களின் நகரம் மற்றும் அவர்களின் நாட்டிற்கு வந்திருந்த துன்ப நிலையை வேறு எவ்விதமாக விவரிக்க இயலும்? எரேமியா தமது எழுதுகோலை எடுத்துப் பின்வருமாறு எழுதினார்:*

> *ஐயோ! ஜனம்பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக் கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே! ஜாதிகளில் பெரியவளும், சீமைகளில் நாயகியுமாயிருந்தவள் கப்பங்கட்டுகிறவளானாளே! இராக்காலத்திலே அழுதுகொண்டிருக்கிறாள், அவளுடைய கண்ணீர் அவள் கன்னங்களில் வடிகிறது, அவளுடைய நேசர் எல்லாருக்குள்ளும் அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை, அவளுடைய சிநேகிதர் எல்லாரும் அவளுக்குத் துரோகிகளும் சத்துருக்களுமானார்கள். யூதா ஜனங்கள் உபத்திரவப்படவும் கொடுமையான அடிமைவேலை செய்யவும் சிறைப்பட்டு போனார்கள் - அவள் புற ஜாதிகளுக்குள்ளே தங்குகிறாள், இளைப்பாறுதல் அடையாள், அவளைத் துன்பப் படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடங்களிலே தொடர்ந்து பிடித்தார்கள். பண்டிகைக்கு வருவார் இல்லாததினால், சீயோனுக்குப் போகிற வழிகள் புலம்புகிறது, அவள் வாசல்கள் எல்லாம் பாழாய்க் கிடக்கிறது, அவள் ஆசாரியர்கள் தவிக்கிறார்கள், அவள் கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்கள். அவளுக்குக் கசப்பே உண்டாயிருக்கிறது. அவள் சத்துருக்கள் தலைமையானார்கள், அவள் பகைஞர் சுகித்திருக் கிறுர்கள், அவளுடைய திரளான பாதகங்களினிமித்தம் கர்த்தர் அவளைச் சஞ்சலப்படுத்தினார், அவள் பிள்ளைகள் சத்துருவுக்கு முன் பாகச் சிறைப்பட்டுபோனார்கள். சீயோன் குமாரத்தியின் அழகெல்*

> *லாம் அவளை விட்டுப்போயிற்று, அவள் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி, தொடருகிறவனுக்கு முன்பாகச் சத்துவமில்லாமல் நடந்து போனார்கள். தனக்குத் சிறுமையும் தவிப்பும் உண்டாகிய நாட்களிலே எருசலேம் பூர்வ நாட்கள் முதற்கொண்டு தனக்கு உண்டாயிருந்த இன்பமானவைகளையெல்லாம் நினைக் கிறாள், அவளுக்கு உதவிசெய்வார் இல்லாமல் அவளுடைய ஜனங்கள் சத்துருவின் கையிலே விழுகையில், பகைஞர் அவளைப் பார்த்து, அவளுடைய ஓய்வுநாட்களைக் குறித்துப் பரியாசம்பண்ணினார்கள். எருசலேம் மிகுதியாய்ப் பாவஞ்செய்தாள், ஆதலால் தூரஸ்திரீயைப் போலானாள், அவளைக் கனம்பண்ணினவர்கள் எல்லாரும் அவளை அசட்டைபண்ணுகிறார்கள், அவளுடைய மானத்தைக் கண்டார்கள், அவளும் பெருமூச்சுவிட்டுப் பின்னிட்டுத் திரும்பினாள். அவளுடைய அசூசம் அவள் வஸ்திர ஓரங்களில் இருந்தது; தனக்கு வரப்போகிற முடிவை நினையாதிருந்தாள்; ஆகையால் அதிசயமாய்த் தாழ்த்தப் பட்டுப்போனாள்; தேற்றுவார் இல்லை; கர்த்தாவே, என் சிறுமை யைப் பாரும்; பகைஞன் பெருமைபாராட்டினானே. அவளுடைய இன்பமான எல்லாவற்றின்மேலும் சத்துரு தன் கையை நீட்டினான், உம்முடைய சபையிலே வரலாகாதென்று தேவரீர் விலக்கிய புறஜாதியார் உமது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்ததைக் கண்டாள். அவளுடைய ஜனங்களெல்லாரும் அப்பந்தேடித் தவிக்கிறார்கள்; தங்கள் உயிரைக் காப்பாற்றத் தங்களுடைய இன்பமானவைகளை ஆகாரத்துக்கென்று கொடுத்துவிட்டார்கள்; கர்த்தாவே, நோக்கிப்பாரும்; எண்ணமற்றவளானேனே (1:1-11).*

*எரேமியா, பாபிலோனுக்குச் செல்லும் நீண்ட பயணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டார், ஆனால் அவரது கூட்டாளிகளில் பலருக்கு அவ்வாறு விலக்களிக்கப்படவில்லை. அவர் நேசித்திருந்த எருசலேம் நகரானது கொள்ளையடிக்கப்பட்டு அதில் எஞ்சியிருந்தவைகள் தீக்கிரை யாக்கப்பட்டதை அவர் கண்ணோக்கியபோது அவர்கள் அடைந்ததிலும் குறைவான துக்கத்தை அவர் அடையவில்லை. அவர் அழுது, தமது புலம்பலை எழுதினார், ஒருகாலத்தில் எருசலேம் எவ்வாறு இருந்தது என்று நினைவுகூர்ந்து, அது தனது பாவங்களினாலே இப்போது என்னவா கியிருந்தது என்பதைக் கூறினார்.*

## *அவள் என்னவாக இருந்தாள்*

*புலம்பல் 1ன் முதல் சில வசனங்களில், ஒருகாலத்தில் எருசலேம் என்னவாக இருந்தது என்பது பற்றிய வெகுவான குறிப்புகள் சிதறிக்கிடக்கின்றன. அவளது மக்களின் பரிதாபநிலையானது, அவர்கள் ஒருகாலத்தில் எவ்வாறு இருந்தனர் என்பதை நினைவுகூருதலினால், வலுமிக்கதாகியது. ஒருகாலத்தில் அந்த நகரமானது மக்களால் நிறைந்து, ஜாதிகளுக்குள் பெரியதாக மற்றும் சீமைகளின் நாயகியாகவும் இருந்தது (1:1). எருசலேமுக்குள் வரும் சாலைகள் யாவற்றிலும் பண்டிகையை ஆசரிக்க வரும் மக்கள் கூட்டம் நிறைந்திருந்திருக்கும். அவளது வாசற்கதவுகளருகில் வருகின்ற மற்றும் போகின்ற மக்களின் கூட்டம்*

*குவிந்திருக்கும் (1:4). அவளது மாண்பையும் மற்றும் கடந்த காலத்தில் அவள் மகிழ்வுடன் அனுபவித்த சந்தோஷங்களையும் எரேமியா நினைவுகூர்ந்தார். அவளை அவர், "சீயோன் குமாரத்தி" (1:6, 7) என்று விவரித்தார்.*

*ஒரு பழைய கூற்றுனது, "கிணறு வற்றும் வரை தண்ணீரின் அருமை நமக்குத் தெரிவதில்லை" என்று உரிமைகோருகிறது. நேர்மாறின் மூலமாக பல பாடங்கள் கற்றுக்கொள்ளப்படுகின்றன. நாம் அடிக்கடி நமக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை இலேசானதாக நினைத்து, ஜாக்கிரதை யற்றவர்களாகி விடுகின்றோம். அவைகள் பயன்படுத்தித் தீர்க்கப்படும் வரையிலும் அல்லது அவைகள் நம்மை விட்டு எடுத்துப் போடப்படும் வரையிலும், நாம் என்ன செய்திருக்க வேண்டும் என்பதைப் பெரும்பாலும் நாம் உணர்ந்தறிவதில்லை. எருசலேமின் மக்களுடைய நிலையும் இவ்வாறே இருந்தது. கடந்த காலத்தை நினைத்துப் பார்த்ததினால் அவர்களின் பெருந்துன்பம் இன்னும் அதிகமாயிற்று. வேதனை நிறைந்த நினைவுகள் என்பது அலைபாயும் வாழ்வின் மிகக்கடுமையான விளைவுகளில் ஒன்றாயிருக்கிறது. நாம் எப்படி இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கும்போது, எந்த இழப்பும் சுமப்பதற்கு மிகவும் கடினமான தாக்கப்படுகிறது.*

## *அவள் என்னவாகியிருந்தாள்*

*பொருளாதாரச் சீரழிவு மற்றும் சமுதாய அடக்குமுறை ஆகியவை தங்களுக்குள்ளேயே மிகவும் மோசமானவைகளாக உள்ளன. யூதா நாடு முற்காலத்திலும், பஞ்சம் மற்றும் கடினமான வேளைகள் ஆகியவற்றினால் துன்புற்றிருந்தது, ஆனால் அவள் இதற்கு முன்பு ஒருக்காலும் தனது சொந்த நாட்டிலிருந்து வேருடன் பிடுங்கப்பட்டு ஒரு விரோதி நாட்டினால் சிறை பிடித்துச் செல்லப்பட்டிருக்கவில்லை. கடந்தகாலத்தில் அவள் கொள்ளை யிடப்பட்டதும் அழிக்கப்பட்டதும் நடந்ததில்லை. அவள் ஒருக்காலும் முற்றிலும் உதவியற்ற நிலையில், தனக்கு மதிப்பு வாய்ந்த தூய்மையான எல்லாமே எடுத்துக்கொள்ளப்பட்டன என்று கருதும் அளவுக்கு மிகவும் பரிதபிக்கப் படத்தக்க நிலையில் ஒருக்காலும் விடப்பட்டிருந்ததில்லை.*

*அவள் உதவியாளோ அல்லது ஆறுதல் அளிப்பவரோ இல்லாதிருந்தாள். அதிகாரம் 1ல் எரேமியா, யூதாவுக்கு நேர்ந்த நம்பமுடியாத பெருவருத் தத்தை, நான்கு முறை "அவளை தேற்றுவார் ஒருவரும் இல்லை" (1:2, 9, 17, 21) என்ற உதவி இல்லாத பல்லவியின் மூலம் வெளிப்படுத்தினார். மற்ற வேளைகளில் அவர், "இளைப்பாறுதல் அடையாள்" (1:3) மற்றும் "அவளுக்கு உதவிசெய்வார் இல்லாமல்" (1:7) என்று கூறினர். உதவி, நம்பிக்கை, ஆறுதல் அல்லது உதவியற்ற நிலையில் இருந்த யூதாவின் மக்கள் இரவு வேளைகளில் மனங்கசந்து அழுததில் வியப்பெதுவும் இருக்கவில்லை (1:2). தனிமையான இரவுகள் என்பவை ஒரு விதவைக்குப் பெரும்பாலும் கடினமான வேளைகளாக உள்ளன. அவள் இரவு வருவதைக் காண அஞ்சுகின்றாள். மற்ற ஒவ்வொருவரும் உறங்குகையில், அவள் தனிமையில் தேம்பி அழுகின்றுள்.*

*அவளது முன்னாள் சிநேகிதர்கள் அவளுக்கு விரோதிகள் ஆகியிருந்தனர் (1:2). "அவளுடைய நேசர் எல்லாருக்குள்ளும் அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை." யூதாவின் எதிரிகள் அவளுடைய எஜமானராகி இருந்தனர், மற்றும் அவளது விரோதிகள் அவளது செலவில் சுகித் திருந்தனர்/வளம்பெற்றனர் (1:5). ஏதோம் மற்றும் எகிப்து என்ற இந்த "முன்னாள் சிநேகிதர்கள்" உண்மையற்ற கூட்டாளிகளாய் இருந்தனர். யூதா, பாபிலோனின் அடக்குமுறையிலிருந்து வெற்றிபெற இவர்களின் உதவியை நம்பியிருந்தது. அவள் அவர்களின் தெய்வங்களைக்கூடக் கனப்படுத்தியிருந்தாள். இது அவர்களின் ஆதரவைப் பெற்றுத்தரும் என்று அவள் நினைத்தாள். உண்மையிலேயே அவர்கள் அவளுக்குத் தேவைப்பட்டபோது, அவர்கள் உதவி செய்ய மனதில்லாது இருந்ததோடு, "அவளது அழிவில் அவளை அவர்கள் பரியாசம் பண்ணினார்கள்" (1:7). அவளுடைய நண்பர்களாய் இருந்தவர்கள், உணவுக்காக மக்கள் வர்த்தகம் செய்யாதிருந்த மதிப்புமிக்க பொருட்கள் யாவற்றையும் எடுத்துச் சென்றிருந்தனர் (1:10, 11). மிகவும் சிறுமைப்படுத்தப்படுதல் என்பது உங்கள் நண்பர்களினாலேயே உங்கள் மீது திருப்பப்படுவதாயுள்ளது.*

*அவள் கட்டாய உழைப்பாளியானாள் (கப்பங்கட்டுகிறவளானாள்) (1:1). அவள், "உபத்திரவப்படவும், கொடுமையான அடிமை வேலை செய்யவும்" சிறைப்பட்டுப் போனாள் (1:3). "அவள் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாகச் சிறைப்பட்டுபோனார்கள்" (1:5). "அவள் புற ஜாதி களுக்குள்ளே தங்குகிறாள், இளைப்பாறுதல் அடையாள்" (1:3). அவள் ஒரு துண்டு நிலம் அல்லது ஒரு விலங்கு (மிருகம்) போலப் பாபிலோனுக் குரியவள் ஆனாள். அவளை உரிமை கொண்டிருந்த நாட்டிற்காக அவள் உழைத்ததின் பேரிலேயே அவளது ஒரே மதிப்பு அளவிடப்பட்டது. அவள் சுயமரியாதை உரிக்கப்பட்டவளாக மற்றும் ஒருகாலத்தில் தனக்குப் பிறரைச் செய்யவைப்பதில் அவள் அகம்மகிழ்ந்திருந்த சந்தோஷமற்ற அற்பமான வேளைகளைச் செய்யும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டாள்.*

*அவள் விவரிப்புக்கு அப்பாற்பட்ட வகையில் வெட்கக் கேடு அடைந்திருந்தாள் (1:8, 9). அவளது நிர்வாணம் வெளிப்படுத்தப்பட்டது. அவள் ஒரு விபசாரியாயிருந்ததுபோல் தண்டிக்கப்பட்டாள். சில வேளைகளில் ஒரு பெண் வேசித்தனம் செய்ததற்கு அவளது உள்ளாடையில் இருக்கும் கறையே சாட்சியாக உள்ளது. அவள் தனது முகத்தைப் புறம்பே திருப்பிக்கொண்டதில் வியப்பெதுவும் இல்லை. எவரொருவரும் தன்னை அடையாளம் கண்டுகொள்ளாதபடிக்குத் தனது முகத்தை ஒளித்துக் கொள்ளும் அளவுக்கு அவள் வெட்கக் கேடு அடைந்தாள். எல்லாரும் காணும்படிக்கு அவளது உண்மையான இயல்பு வெளிப்படுத்தப்பட்டது. இனியும் யூதா, தான் தேவனுடைய ஜனமாயிருப்பதாக நடிக்க இயலாது. அவள் தனது தேவனுக்கு உண்மையற்றவளாய் இருந்தாள் என்பதை ஒவ்வொருவரும் அறிந்துள்ளனர். தன் கணவனுக்கு உண்மையற்று நடந்து கொண்ட பெண்ணைப்போல் அவள் நடத்தப்பட்டாள்.*

*அவளுடைய நம்பிக்கையூட்டக்கூடிய இளம் தலைவர்கள் ஓடிப்போயிருந்தனர் (1:6). இது சிதேக்கியாவின் மகன்களைக்*

*குறிப்பிடுவதாயிருக்கலாம். இவர்கள் அரசராயிருந்த தங்களின் தந்தையுடன் சேர்ந்து, தப்பித்து ஓட முயற்சி செய்து, நேபுகாத்நேச்சாரின் படையினரால் பிடிக்கப்பட்டனர் (2 இரா. 25:4-7). இவர்கள் மேய்ச்சலைக் காணாத மான்கள் என்று விவரிக்கப்பட்டனர். நேர்ப்பொருளில், இவர்கள் உணவின்றி இருந்தனர் மற்றும் பட்டினியைத் தவிர்ப்பதற்காகத் தப்பிச் செல்ல முயற்சி செய்தனர். உணவுக்குறைவினால் பலவீனம் அடைந்திருந்த படியால், அவர்களைத் துரத்தியவர்களால் சுலபமாக மேற்கொள்ளப் பட்டனர்.*

*இந்த விளக்கங்கள், பாபிலோனில் அரசனின் அரண்மனையில் சேவிக்கும்படி ஏற்கனவே பிடிக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டிருந்த திரளான எண்ணிக்கையிலான நேர்த்தியான இளம் பிரபுக்களையும் குறிப்பிடக்கூடும். அவர்களில், தானியேல், அனனியா, மீஷாவேல் மற்றும் அசரியா ஆகியோரும் இருந்தனர் (தானி. 1:1-7).*

*அவளது கன்னிகைகள் சஞ்சலப்படுத்தப்பட்டனர் (1:4). எந்த ஒரு நாட்டின் எதிர்காலமும் அதில் உள்ள இளம்பிராயத்தினரைச் சார்ந்துள்ளது. யூதாவின் இளம் மனிதர்கள் [அடிமைகளாக] இழுத்துச் செல்லப் பட்டிருந்தனர் அல்லது கொல்லப்பட்டிருந்தனர், மற்றும் நாட்டிற்கு எதிர்காலத்தில் மனைவியர்களாக மற்றும் தாய்மார்களாகவிருந்த இளம் கன்னிப்பெண்கள், தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கும் தீட்டுப் படுத்தப்படுவதற்கும் அடிமைத்தனத்தில் இழுத்துச் செல்லப்பட்டிருந்தனர்.*

## *செய்தி என்ன?*

*பாவத்தின் மீதான கசப்புணர்வை நீங்கள் எப்போதாவது அனுபவித்தது உண்டா? இல்லையென்றால் ஒருவேளை இப்போது நீங்கள் அதை அனு பவிப்பீர்கள். உங்கள் பாவம் நிறைந்த நிலையைக் குறித்துப் பெருந்துக்கம் அடைவதற்கு ஒருவேளை இதைப்போன்ற அனுபவம் உங்களுக்குத் தேவையாகக்கூட இருக்கலாம். விழுந்துபோன யூதா என்ற சித்தரிப்பானது உண்மையில், பரிசுத்த தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்திக் கொள்கின்ற, பரிசுத்தமற்ற ஒரு நபரைப் பற்றிய சித்தரிப்பாகவே உள்ளது. நீங்கள் அந்தச் சூழ்நிலையில் இருந்தால், பின்வரும் ஆலோசனைகள் உங்களுக்கு உதவலாம்.*

*(1) தேவனுடைய மகத்தான வல்லமையை மதித்து ஒப்புக் கொள்ளுங்கள். நாம் நமது ஆசீர்வாதங்களின் ஆதார மூலத்தை உணர்ந்தறியத் தவறுகின்றபோது, விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, அவை நமக்கு தேவை என்று நினைக்கவும் அவற்றைக் கேட்கவும் தலைப்படுகின்றோம். நாம் சுயநலம் கொண்டவர்களாக, ஒருபோதும் போதுமானவற்றைக் கொண்டிராதவர்களாக ஆகிவிடுகின்றோம். மாம்சமானது அதிகம் அதிகமாக கேட்டு வற்புறுத்துகிறது.*

*பூங்கா ஒன்றிலிருந்த இருக்கையில் அமர்ந்துகொண்டு, மலருகின்ற மலர்களையும், சிற்றொலி எழுப்பும் பறவைகளையும், பொங்கிவரும் வசந்தகாலக் காற்றையும் மகிழ்வுடன் அனுபவித்துக்கொண்டிருந்த ஜான்*

என்ற பெயர் கொண்ட மனிதரைப் பற்றிய கதையொன்று கூறப்பட்டுள்ளது. திடீரென்று அந்த மனிதருக்கு முன்பாக, நன்கு உடையணிந்த நபர் நடந்து வந்து, அவருக்கு சிறிது பணம் கொடுத்துவிட்டு நடந்து சென்று விடுகின்றார். அவர் பூங்காவின் மூலையை நோக்கி நடந்து சென்று, ஒரு வார்த்தை கூடக் கூறாமல் பார்வையில் இருந்து மறைந்து விடுகின்றார். நிச்சயமாகவே, ஜான் திகைப்படைந்திருந்தார்.

அடுத்த நாளின் அதே வேளையில் ஜான் பூங்காவின் இருக்கைக்கு திரும்பி வருகின்றார். மர்மம் நிறைந்த அம்மனிதர் மீண்டும் ஜானை அணுகி, அவருக்கு பணம் கொடுத்து, எதுவும் பேசாமலேயே சென்று விடுகின்றார். ஜான் திகைப்படைந்தார். இந்த மனிதன் யார்? இவர் எதற்காக ஜானுக்குப் பணம் கொடுத்துக் கொண்டிருந்தார்?

அடுத்த நாளும் ஜான் பூங்காவின் அந்த இருக்கைக்குத் திரும்ப வருகின்றார். முந்தின இரண்டு நாட்களில் போலவே அம்மனிதரும் ஜானை நோக்கி நடந்து வந்தார். ஜான் எதிர்பார்ப்புடன் தமது கையை நீட்டுகின்றார்; ஆனால் இந்த வேளையில், அம்மனிதர் நிற்காமல் கடந்து சென்றுவிடுகின்றார். ஜான் குதித்து, அவர் பின்னே சென்று, "எனது பணம் எங்கே?" என்று கேட்கின்றார். சற்றும் தாமதியாமல் அம்மனிதர், "உனக்கு நான் எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லையே" என்று கூறிவிட்டு மீண்டும் மறைந்து விடுகின்றார்.

அந்நியர் ஒருவர் எந்தக் காரணமும் இன்றித் தனக்குப் பணம் கொடுத்தது ஏன் என்று ஜான் வியப்படைந்தாலும், அவர் உண்மையில் அம்மனிதரைப் பாராட்டவில்லை. பணத்தைப் பெறத் தகுதியான ஒன்றையும் அவர் செய்யாதிருப்பினும், விரைவிலேயே அதை எதிர்பார்க்கும்படியான எண்ணத்தை அவர் வளர்த்துக் கொண்டார். தேவனிடத்திலிருந்து வருகின்ற ஆசீர்வாதங்களைப் பொறுத்தமட்டில் நாமும் கூட இவ்வாறு இருக்கக்கூடும். தேவனிடத்திலிருந்து எதையும் பெறுவதற்கு நாம் தகுதியானவர்களாக இருப்பதில்லை. அவர் நமக்கு அளிப்பதற்கென்று ஏதொன்றையும் நாம் சொந்தத்தில் பெற்று இருப்பதில்லை; சற்றுக்காலம் அவர் அவற்றை நமக்கு அளிக்கின்றார். நாம் அவரை, ஆதாரமூலமாக உணர்ந்தறியவும், அவருக்கு நன்றி செலுத்தவும், அவரது ஆசீர்வாதங்களை அவரது மகிமை மற்றும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தவும் தவறினால், விரைவிலேயே, நமக்குத் தேவையற்றவைகளைக் கூட நாம் தேவனிடம் வற்புறுத்திக் கேட்கத் தொடங்குவோம். விஷயங்களை மிகவும் மோசமாக்குவதற்கு, நாம் விரும்புபவற்றைத் தேவன் நமக்கு அளிக்காததற்காக அவரைக் குற்றப்படுத்தவும் தொடங்குவோம். நாம் அவருக்கு உண்மையற்று இருப்பதினால் ஏற்படும் விளைவானது நாம் விரும்புபவற்றிற்காகப் பிற ஆதார மூலங்களைக் கண்ணோக்கச் செய்து விடுகிறது. யூதாவின் மக்கள் ஏதோம் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு, தாங்கள் விரும்புபவற்றைப் பெறுவதற்கு அவர்களைச் சார்ந்திருந்தனர்.

(2) உங்கள் செயல்களுக்காகத் தேவனுக்கு முன்பாக கணக்கொப்புவிப்பவர்களாய் இருங்கள். புலம்பல் புத்தகம் முழுவதிலும், யூதாவின்

*துன்பத்திற்க்கான காரணத்தை எரேமியா திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்: "அவளுடைய திரளான பாவங்களினிமித்தம் கர்த்தர் அவளைச் சஞ்சலப் படுத்தினார்" (1:5); "எருசலேம் மிகுதியாய்ப் பாவஞ்செய்தாள், ஆதலால் தூரஸ்திரீயைப் போலானாள்" (1:8); "அவளுடைய அசூசம் அவள் வஸ்திர ஓரங்களில் இருந்தது, தனக்கு வரப்போகிற முடிவை நினையாதிருந்தாள், ஆகையால் அதிசயமாய்த் தாழ்த்தப்பட்டுபோனாள்" (1:9); "அவளுடைய இன்பமான எல்லாவற்றின் மேலும் சத்துரு தன் கையை நீட்டினான், உம்முடைய சபையிலே வரலாகாதென்று தேவரீர் விலக்கிய புறஜாதியார் உமது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்ததைக் கண்டாள்" (1:10).*

*பிரசங்கி 3:15ன் கடைசிப்பகுதியானது, "நடந்ததையோ தேவன் விசாரிப்பார்" என்று கூறுகிறது. பாலியல் ரீதியான பாவங்களைப்பற்றிப் பேசுகையில் 1 தெசலோனிக்கேயர் 4:6, "முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லா வற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்" என்று வெளிப்படுத்துகிறது. இவ்வசனத்தின் முந்திய பகுதியானது தேவனைப் பற்றிய இன்னொரு முக்கியமான சத்தியத்தை வெளிப்படுத்துகிறது: அவர் விளைவுகளைப்பற்றி எப்போதும் முன்னெச்சரிக்கை செய்து தம்மிடமாய்த் திரும்பும்படி அழைக்கின்றார். யூதா மற்றும் எருசலேம் ஜனங்களின் உண்மையற்ற தன்மையினுடைய விளைவுகளைப் பற்றி அவர்களுக்கு அவர் மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்தார். தேவனுக்காகப் பேசியவர்களைக் கவனித்துக் கேட்பதற்கு மாறாக, அவர்கள் தீர்க்கதரிசிகளை ஒழிக்க முயற்சி செய்தனர்.*

*நோவாவின் நாட்களில், அவர் நீதியைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் (2 பேது. 2:5), தேவன் 120 ஆண்டுகள் அளவாகப் பொறுமையாயிருந்தார் (ஆதி. 6:3). மனிதனின் முரட்டாட்டம், விடாப்பிடியான கலகம் ஆகியவை கடைசியில் நிறைவான நிலையை அடைந்தபோது, அவர் உலகத்திற்குத் தமது நியாயத்தீர்ப்பைக் கொடுத்தார்.*

*தேவனுடைய நியாயத்தீர்ப்பு எப்போதும் நீதியுள்ளதாக இருக்கிறது (அப். 17:31), இது அவரது நியாயத்தீர்ப்பு, செய்யப்பட்ட பாவங்களுக்குப் பொருத்தமானதாகவே எப்போதும் உள்ளது என்று அர்த்தப்படுகிறது. யூதாவின் மீது அவரது நியாயத்தீர்ப்பு கடுமையானதாக இருந்தது என்று நாம் நினைத்தால், அவளது பாவத்தின் தீவிரத்தன்மையை நாம் மீண்டும் கண்ணோக்குவது அவசியமாகிறது. கணக்கு ஒப்புவிக்கும் நாள் வரும் வரையிலும் மக்கள் தங்கள் குற்றங்களின் தீவிரத்தன்மையைப் பற்றி மிகவும் அரிதாகவே உணர்ந்தறிகின்றனர்.*

*தேவனுக்கு முன்பாகக் கணக்கு ஒப்புவித்தலை ஏற்றுக்கொள்ளுதல் என்பது, மோசமான தேர்ந்து கொள்ளுதல்கள் அவற்றிற்குரிய விளைவுகளைக் கொண்டுள்ளன என்பதைப் புரிந்துணர்தல் என்று அர்த்தப்படுகிறது. அந்தப் புரிந்துணர்தல் மேலானவற்றைத் தேர்ந்து கொள்ள நமக்கு உதவுகிறது. கணக்கு ஒப்புவிக்கும் நிலையில் இருத்தல் என்பது, நாம் மோசமான தேர்ந்து கொள்ளுதல்களை மேற்கொள்ளுகின்றபோது, நமது தவறுகளை*

ஒப்புக்கொண்டு கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்மைப்படுத்தி, அவரது மன்னிப்பை நாடுகின்றோம் என்றும் அர்த்தப்படுகிறது.

*(3) மற்றவர்கள் மீது நீங்கள் கொண்டுள்ள செல்வாக்கின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்.* நீங்கள் மற்றவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்களாய் இருக்கின்றீர்கள். நாம் சரியான தேர்ந்து கொள்ளுதல்களை மேற்கொள்ளும்போது, மற்றவர்கள் நம்முடன் உயர்வான சாலையில் பயணிக்கும்படி அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றோம். நாம் தாழ்வான சாலையில் பயணத்தை மேற்கொள்ளும்போது, நாம் தனியாக நடக்க மாட்டோம். மற்றவர்கள் நம்முடன் நடக்கும்படிக்கு அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவோம், அவர்கள் பெரும்பாலும் நாம் அதிகம் நேசிப்பவர்களாக இருப்பார்கள். நமது பிள்ளைகள்தான் நமது செயல்பாடுகளின் மூலம் சுலபமாகச் செல்வாக்குச் செலுத்தப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

யூதாவைப் பாபிலோன் முற்றுகையிட்டபோது, மரித்தவர்கள் நல்வாய்ப்பை உடையவர்களாயிருந்தபோதிலும், அந்த முற்றுகையானது குழந்தையைக் கொலைசெய்வதாகவே இருந்தது என்பது எரேமியா கையாளுவதற்கு மிகவும் கடினமான விளைவாக இருந்தது. மற்றவர்கள் அவர்களின் பெற்றோர்களின் கரங்களிலிருந்து பிடுங்கப்பட்டு அடிமைத் தனத்திற்கு விற்கப்பட்டார்கள். சிலர் கற்பழிக்கப்பட்டு, நிந்திக்கப் பட்டார்கள். அவர்களுடைய பெற்றோர்களின் கீழ்ப்படியாத முரட்டுத் தனத்தினால், குற்றமில்லாத சிறு குழந்தைகள் அவதிப்பட்டனர்.

குழந்தைகள், நமது சொந்த குழந்தைகள் கஷ்டங்கள் அனுபவிப்பது என்பது நம்முடைய பாவங்களின் மிகவும் கடினமான பின்விளைவுகளில் ஒன்றாய் இருக்கிறது. தேவபக்தி என்ற வழிவழி (பரம்பரை) உடைமையை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுங்கள். உங்கள் வாழ்வு மற்றும் போதனைகள் ஆகியவற்றினால் அவர்களுக்குத் தேவனை அறிமுகப்படுத்துங்கள். தேவனை அறிவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். வெள்ளி அல்லது பொன் ஆகியவற்றைப் பார்க்கிலும் அதிகம் மதிப்பு வாய்ந்த சுதந்திரத்தை அவர்களுக்கு அளியுங்கள்: அவர்களுக்கு ஒரு நற்கீர்த்தியைக் கொடுங்கள் (நீதி. 22:1; பிர. 7:1). அவர்களுக்காக நீதியின் பாதையொன்றை ஆயத்தம்பண்ணுங்கள். அலைக்கழிக்கும் தண்ணீர்களின்மீது அவர்களுக்குப் பாலங்களைக் கட்டுங்கள்.

உங்களுக்கு ஒரு தேர்ந்துகொள்ளுதல் தரப்பட்டுள்ளது. அதைச் செயல்படுத்த இன்னும் உங்களுக்கு நேரம் உள்ளது. மிகவும் தாமதமாகி விடுவதற்கு முன்பு இயேசுவினிடத்தில் திரும்புங்கள்.

## விதவையின் துன்பநிலை

விதவைகள், அதிலும் விசேஷமாக குடும்பங்களற்ற விதவைகள் பராமரிக்கப்படுவதற்குத் தேவன் எப்போதுமே விசேஷித்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, நாயீன் நகரில் இருந்து

*வெளியே வந்துகொண்டிருந்த விதவை ஒருத்தியைச் சந்தித்தபோது, அவள் மீது பரிவிரக்கம் கொண்டவராய்ச் செயல்பட்டார். அவள் தனது [மரித்துப் போன] ஒரே மகனை அடக்கம் செய்வதற்குக் கொண்டுசென்றாள். அவளிடத்தில் இயேசு, "அழாதே" என்று சொன்னார். மரித்துப்போயிருந்த வனை எழுந்திருக்கும்படி அவர் சொன்னபோது, அந்த வாலிபன் பாடையில் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். இயேசு, அந்தப் பையனை அவனது தாயிடம் (உயிருள்ளவனாக) திரும்பவும் முன்னிறுத் தினார் (லூக். 7:11-15). இருதயத்தைத் தொடக்கூடிய இந்த உதாரணத்துடன் கூடுதலாக, தொடக்ககால சபையானது விதவைகளையும் திக்கற்றவர்களையும் பராமரிக்கும்படி போதிக்கப்பட்டது (அப். 6; 1 தீமோ. 5:3-16; யாக். 1:27).*

*மோவாபியப் பெண்ணான ரூத் மற்றும் அவளது மாமியான நகோமி என்ற யூதப்பெண் ஆகியோருடைய வரலாறு, பிள்ளையில்லாதிருந்த விதவைகளின் துன்பநிலை பற்றிய மிகவும் விவரிப்பான வரலாறுகளில் ஒன்றாக உள்ளது. நகோமிக்கு மாபெரும் அன்பையும் பற்றுறுதியையும் காண்பித்த ரூத்தின் உண்மைத் தன்மையின் காரணமாகத் தேவன் அவளை ஆசீர்வதித்தார் (ரூத்தின் சரித்திரம் என்ற புத்தகத்தில் காணவும்).*

*யூதேயக் கலாச்சாரத்தில், கணவரையும் பிள்ளைகளையும் இழந்த விதவை மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவளாய் இருந்தாள். கணவன் இல்லாத நிலையில், அவள் தன்னை ஆதரிக்கும் வழியெதுவும் அற்றவளாகின்றாள். பிள்ளைகள் இல்லாத நிலையில், அவள் சுதந்திரமற்றவளாகின்றாள்; ஆகையால் அவள் பொருளாதார ரீதியாக பாழடைகின்றாள். எல்லாவற்றையும் இழந்துபோன விதவையின் நிலையைக் காட்டிலும் கவலை மிகுந்தது வேறு எதுவும் இல்லை. இவ்விதமாக எரேமியா, எருசலேமின் பாழாக்கப்பட்ட சூழ்நிலையைச் சித்தரிப்பதற்கு, பாழான, அழுகின்ற விதவையின் சித்தரிப்பைப் பயன்படுத்தினார். ''ஐயோ! ஜனம்பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே ..." (புல. 1:1).*